

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண். 15

## சுற்றுச்சூழல்

அறிவிப்புகள்

2019–2020

சுற்றுச்சூழல் – வனத்துறை

# சுற்றுச்சூழல்

## மானியக் கோரிக்கை எண். 15

# அறிவிப்புகள்
# 2019–2020

**K.C. கருப்பணன்**

சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
## 2019–20 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்
## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

### 1. தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றத் தகவல் பரப்பு சேவைகள்.

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு "காலநிலை மாற்ற தகவல் பரப்பு சேவைகளை" வழங்க அதாவது காலநிலை மாற்றம் குறித்த தகவல்களை சேகரித்தல், பரப்புதல் ஆகிய காலநிலை மாற்றத் தகவல்களை மேற்படி திட்டத்தின் கீழ் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** காலநிலை மாற்ற தகவல் பரப்பு சேவைகளை, மாநில அரசின் சுற்றுச்சூழல் துறையினுடைய தமிழ் நாடு காலநிலை மாற்றப் பிரிவின் மூலம் துவக்கத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ரூபாய் 27 இலட்சம் செலவில் வழங்கப்படும். மேலும் நடப்பு 2019–20 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூபாய் 8 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 2. தமிழ்நாட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, கழிமுகங்கள் மற்றும் ஏரிகளில் நுண்ணிய பிளாஸ்டிக் பொருட்களின் தாக்கம் குறித்து மதிப்பீடு செய்தல்.

பிளாஸ்டிக் பொருட்கள் நீர் வாழ் உயிரினங்களுக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். நுண் பிளாஸ்டிக் பொருட்கள் கடல்வாழ்விடங்களின் நிலைபாட்டை மாற்றக்கூடிய தன்மை கொண்டதாகும்.

**இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ரூபாய் 81.20 இலட்சம் செலவில் நுண்பிளாஸ்டிக் பொருட்களின் நிலை குறித்த மதிப்பீடும், ஆய்வுகளும், மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டு 2019–20–ல் ரூபாய் 25.40 இலட்சத்தில் இத்திட்டம் செல்படுத்தப்படும்.

தமிழ் நாட்டில் உள்ள தேர்வு செய்யப்பட்ட கடற்கரைப்பகுதி, கழிமுகங்கள் மற்றும் ஏரிகளில் நுண்பிளாஸ்டிக் பொருட்களின் நிலை குறித்த அடிப்படை தகவல்கள், தாக்கங்களுக்குரிய தீர்வு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக இத்திட்டம் அமையும்.

## 3. காலநிலை தகவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக் கழகத்தில் "காலநிலை ஸ்டுடியோ" ஒன்றினை ஏற்படுத்துதல்.

அரசு அலுவலர்கள், விஞ்ஞானிகள், இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கிராமப்புற பங்குதாரர்கள் ஆகியோருக்கு காலநிலை மாற்றம் குறித்த அறிவினை பயிற்றுவிப்பதன் மூலம் காலநிலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான திறனை வளர்த்தல், அறிவாற்றல் மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்தும் விதமாக, **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அண்ணா பல்கலைக் கழகத்தில் காலநிலை தகவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், அதாவது "காலநிலை ஸ்டுடியோ" ஒன்று ஏற்படுத்தப்படும்.

**4. தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணவ, மாணவியர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, சூழல் சுற்றுலா அழைத்துச் செல்ல மாவட்டத்திற்கு ரூபாய் 2 இலட்சம் செலவில் 32 மாவட்டங்களில் நடத்துதல்.**

சூழல் சிந்தனையை மாணவர்களிடையே வலிமையடையச் செய்யவும் மற்றும் பள்ளி மாணாக்கர்களிடையே சூழல் முக்கியத்துவத்தினை பரப்பும் விதமாகவும், தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணாக்கர்களுக்கு வினாடி வினா, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பு வரை மற்றும் எட்டாம் வகுப்பிற்கு மேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் மட்டுமல்லாது வெற்றி பெற்ற மாணவ மற்றும் மாணவியர்ளுக்கு தனித்தனியாக சூழல் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்திற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம், 32 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 64 இலட்சம் கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டது. திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, **இதய தெய்வம்**

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் **ஆணையின்படி,** இத்திட்டம் மாவட்டத்திற்கு ரூபாய் 2 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களில் ரூபாய் 64 இலட்சம் செலவில் 2019–20 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5. வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் மூலம், 32 மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 2 இலட்சம் செலவில் பிளாஸ்டிக் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

மனித சமுதாயத்திற்கும் சூழல் அமைப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்களிடையே மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பது மிகவும் அவசியமானதாகும். 2013–14 ஆம் ஆண்டு முதல் 2018–19 வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளைக் கொண்டு நாட்டுப்பாடல், நாடகம், தெரு நாடகம், வில்லுப்பாட்டு, பாரம்பரிய நடனம் ஆகியவைகளுடன் வாகனங்கள் மூலமாக விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட விழிப்புணர்வுப் பிரச்சாரம் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதால், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மாவட்டத்தில் 20

இடங்களில் வாகனங்கள் மூலமாக கலைக்குழுக்களின் பங்களிப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் மூலம் மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 2 இலட்சம் செலவில், 32 மாவட்டங்களிலும் மொத்தம் ரூபாய் 64 இலட்சம் செலவில் 2019–20 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படும்.

## 6. ஈரோடு மாவட்டம் பவானி வட்டத்தில் அமைந்துள்ள ஓடத்துரை ஏரியினை சூழல் மறுகொணர்வு செய்தல்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள ஓடத்துரை ஏரியின் மூலம் 45.84 மில்லியன் கனஅடி நீர் கொள்ளளவுடன் 3 கழுங்குகள் மூலம் 172.64 ஏக்கர் விளை நிலங்களுக்கு நீர்பாசன வசதி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஏரியானது, வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கும் ஏரியாகவும், வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழைக்காலங்களில் இந்த ஏரி தண்ணீர் பெறும் வசதி உள்ளது.

**இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இந்த ஏரியினை நடப்பு 2019–20 ஆம் நிதியாண்டில் சூழல் மறுகொணர்வு செய்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர சூழல் மறுகொணர்வு பணிகள் ரூபாய் 320 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 7. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின், அரியலூர் மாவட்ட புதிய அலுவலகக் கட்டடம்

அரியலூரில் இயங்கி வரும் மாவட்ட வாரிய அலுவலகம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகம் அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் அமைந்துள்ள 650 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கவும், கண்காணிக்கவும் இயங்கி வருகிறது.

**இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2019-20 ஆம் நிதி ஆண்டில் அரியலூர் மாவட்டத்தில் வாரியத்திற்கு புதிய அலுவலக கட்டடம் ரூபாய் 3 கோடி செலவில் கட்டப்படும்.

## 8. நீர், காற்று, நிலம் மாசு குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறும்படங்கள் ரூபாய் 50 லட்சம் செலவில் தயாரித்தல்

உலக சுற்றுச்சூழல் தினம், விநாயக சதுர்த்தி விழா, தீபாவளி, மற்றும் போகிப்பண்டிகை தினங்களில் வாரியத்தால் ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

இதனை விரிவுபடுத்தும் வகையில், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு குறும்படங்களை, சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் திரையரங்குகளில் திரையிட ஏதுவாக 2019–20 ஆம் நிதி ஆண்டில் நீர், காற்று மற்றும் நிலம் மாசு குறித்த விழிப்புணர்வு குறும்படங்கள் ரூபாய் 50 லட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

**9. வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி மையம் மூலம் அனைத்து பயனாளிகளுக்கும் காற்று மாசு மற்றும் அதன் விளைவுகள் குறித்த பயிற்சி வகுப்புகள் ரூபாய் 50 இலட்சம் செலவில் நடத்தப்படும்.**

காற்று மாசு மிகப்பெரிய சுற்றுச்சூழல் சவால்களில் ஒன்றாகும்.

காற்று மாசு மற்றும் அதன் விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2019–20 ஆம் நிதி ஆண்டில் வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி மையம் மூலம் அனைத்து பயனாளிகளுக்கும் ரூபாய் 50 இலட்சம் செலவில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

10. சென்னையில் உள்ள வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தை சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம், 1986–ன் கீழ் தரசான்றிதழ் பெறுவதற்காக சுமார் ரூ. 1.5 கோடி செலவில் தேவையான ஆய்வக உபகரணங்கள் வாங்கப்படும்.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா **அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சென்னையில் உள்ள வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தின் தரத்தினை உயர்த்தி 1986–ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகளின்படி, தரச்சான்றிதழ் பெறுவதற்காக 2019–20 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 1.5 கோடி செலவில் ஆய்வக உபகரணங்கள் வாங்கப்படும்.

## 11. பவுண்டரி தொழிலகங்களுக்கு அரசாணை (நிலை) எண். 127, சுற்றுப்புறம் மற்றும் வனத் (சு.சூ.3) துறை, நாள்: 08.05.1998–லிருந்து விலக்கு அளிக்க, வாரியம் மூலம் ஒரு வல்லுநர் குழு அமைத்து, ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்தல்.

பவுண்டரி தொழிலகங்கள் அரசாணை (நிலை) எண்.127, சுற்றுப்புறம் மற்றும் வனத் (சு.சூ.3) துறை, நாள்: 08.05.1998–ன் படி சில குறிப்பிட்ட ஆறுகளிலிருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அமைக்க தமிழக அரசு தடைவிதித்துள்ளது. தற்போது பவுண்டரி தொழிலகங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் காற்று மாசு தடுப்பு சாதனங்களில் நவீன தொழிற் நுட்பங்களை புகுத்தியுள்ளதால் காற்று மற்றும் நீர்நிலைகளில் மாசு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2019–20 ஆம் நிதி ஆண்டில் ஒரு வல்லுனர் குழுவினை ஏற்படுத்தி பவுண்டரி தொழிலகங்களை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 12. காற்றின் தன்மையை கண்காணிக்கும் திறனை அதிகரிக்க 8 மாவட்டங்களில் புதியதாக காற்று தர கண்காணிப்பு மையங்களை ரூபாய் 1.4 கோடி செலவில் ஏற்படுத்துதல்

வாரியம் 24 மாவட்டங்களில் 28 தேசிய காற்று கண்காணிப்பு நிலையங்களையும், 9 தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்களையும் நிறுவி உள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் காற்றின் தரத்தை கண்காணிக்கும் விதமாக, **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மீதமுள்ள 8 மாவட்டங்களில் தலா மூன்று காற்று தர கண்காணிப்பு மையங்களை 2019–20 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 1.4 கோடி செலவில் நிறுவப்படும்.

## 13. ஆறுகளில் நீரின் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு வாரியத்தில் நீர் தர மேலாண்மை பிரிவினை ரூபாய் 50 இலட்சம் செலவில் உருவாக்குதல்.

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், நாட்டில் 351 ஆறுகள் மாசடைந்துள்ளதாகவும், அவற்றுள் தமிழகத்தில் 6 ஆறுகள் மாசடைந்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

பல்வேறு துறைகளின் உதவியுடன் மாசினை குறைப்பதற்கான செயல்திட்ட அறிக்கையினை தமிழக அரசு தயாரித்து மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பித்துள்ளது.

மேற்படி செயல்திட்ட அறிக்கையினை பல்வேறு துறைகள் நடைமுறைப்படுத்தி வருகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** வாரியத்தில் நீர் தர மேலாண்மை பிரிவு ஒன்று 2019–20 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**14. பள்ளி மாணவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் 300 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 1.5 கோடி செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி (LCD Projector) வழங்குதல்**

பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, மற்றும் இதர சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2019–20 ஆம் நிதி ஆண்டில் 300 அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு ரூபாய் 1.5 கோடி செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி வழங்கப்படும்

**K.C. கருப்பணன்**
**சுற்றுச்சூழல் துறை அமைச்சர்**